# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1644/9 - 2010 මාර්තු 09 වැනි අඟහරුවාදා - 2010.03.09

*1644/9 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இதற்கான அட்டவணை - I இன் நிரல் - I இல் குறிப்பிடப்பட்டு இதன் நேரொத்த அட்டவணை I இன் நிரல் II இல் மேலும் விவரிக்கப்பட்ட பகுதிகள் அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், இந்தப் பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தக் கட்டளையிடுகின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி*
*அபிவிருத்தி அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி*
*அபிவிருத்தி அமைச்சு,*
*"செத்சிறிபாய",*
*பத்தரமுல்லை,*
*2010, மாச்சு 5.*

**அட்டவணை**

*நிரல் I*

*கிளிநொச்சி நகரப்பகுதி*

வட மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள பின்வரும் கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளுக்குள் வருவதும் நிரல் II இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு எல்லைகளையும் வரையறைகளையும் கொண்ட எல்லாக் காணி இடப்பரப்புகளும் -

1. கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவு :

   KN/07 பொன்னகர்
   KN/08 பாரதிபுரம்
   KN/09 மலையாளபுரம்
   KN/10 விவேகானந்த நகர்
   KN/11 கிருஷ்ணபுரம்
   KN/12 உதயநகர் கிழக்கு
   KN/13 உதயநகர் மேற்கு

*நிரல் II*

*கிளிநொச்சி நகரப்பகுதி*

**வடக்கு :**

A 9 வீதியிலிருந்து குமரபுரம், பரந்தன் கிராம எல்லையோரமாக மேற்கு நோக்கிச் சென்று 3.5 கி. மீ. தூரத்திலிருந்து தொடங்கும் புள்ளியிலிருந்து குமரபுரம், பரந்தன் கிராம எல்லையோரமாக கிழக்கு நோக்கி ஒரு கோடு வரையின் அது சென்று A 9 வீதியின் மத்தியகோட்டை ஊடறுக்கும் வரையும், பின்பு 500 மீற்றர்கள் தூரத்திற்குச் சென்று பின்பு தெற்கு நோக்கி 1.6 கி. மீ. சென்று பின்பு புதுக்குடியிருப்பு வீதிக்குச் சமாந்தரமாகக் கிழக்கு நோக்கி 3. 5. கி. மீ. தூரம் செல்லும் வரையும்.

**கிழக்கு :**

கடைசியாகக் கூறப்பட்ட புள்ளியிலிருந்து தெற்கு நோக்கி 1. 2 கி. மீ. தூரத்துக்கு ஒரு கோடு வரையின் புதுக்குடியிருப்பு பரந்தன்

**அட்டவணை** (தொடர்ச்சி)

*நிரல் I*

*கிளிநொச்சி நகரப்பகுதி*

KN/*14* அம்பாள் குளம்
KN/*15* செல்வாநகர்
KN/*16* ஆனந்தபுரம்
KN/*17* தொண்டமான்நகர்
KN/*18* கனகாம்பிகைக்குளம்
KN/*21* திருவையாறு மேற்கு
KN/*22* இரத்தினபுரம்
KN/*23* கிளிநொச்சி நகரம்
KN/*24* மருதநகர்
KN/*25* பன்னங்கண்டி
(வடக்கு, மேற்கு பகுதி)
KN/*26* கனகபுரம்
KN/*27* திருநகர் தெற்கு
KN/*28* திருநகர் வடக்கு
KN/*29* கணேசபுரம்
KN/*30* ஜெயந்திநகர்
KN/*31* பெரியபரந்தன்
KN/*32* உருத்திரபுரம் வடக்கு
KN/*33* உருத்திரபுரம் கிழக்கு
KN/*35* சிவநகர்
KN/*36* ஊற்றுப்புலம்
KN/*37* புதுமுறிப்பு

*2*. கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவு :

KN/*43* குமரபுரம்
KN/*44* பரந்தன்
KN/*48* கோரக்கன்கட்டு
(தெற்கு மேற்கு பகுதி)

*நிரல் II*

*கிளிநொச்சி நகரப்பகுதி*

வீதியின் மத்தியகோட்டைச் சந்திக்கும் வரையும், மேலும் மேற்கு நோக்கி மேலே கூறப்பட்ட பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியோரமாக *2.0* கி. மீ. தூரம் சென்று பரந்தன் சந்தியிலிருந்து *1. 6* கி. மீ. இல் ஒரு வீதியினை சந்திக்கும் வரையும், பின்பு மேலே கூறப்பட்ட வீதியோரமாக தெற்கு நோக்கி ஒரு கோடு வரையின் இது இரணைமடு பிரதான வீதியைச் சந்திக்கும் வரையும், பின்பு மேலே கூறப்பட்ட இரணைமடு வீதியோரமாக தெற்கு நோக்கிச் சென்று முல்லைத்தீவு மாவட்டத்தின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் வரையும்.

**தெற்கு :**

கடைசியாகக் கூறப்பட்ட புள்ளியிலிருந்து மேலே கூறப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட எல்லையோரமாக மேற்கு நோக்கி ஒரு கோடு வரையின் அது A *9* வீதியினை ஊடறுத்துச் சென்று, அக்கராயன் குளம் - பொன்னகர் கிராம எல்லையைச் சந்திக்கும்வரை, (குறிப்புரை: கிளிநொச்சி *1 : 50 000* தாள்).

**மேற்கு :**

கடைசியாகக் கூறப்பட்ட புள்ளியிலிருந்து மேலே கூறப்பட்ட கிராம எல்லையோரமாக வடமேற்கு நோக்கி புதுமுறிப்புக் குளத்தினை ஊடறுத்துச் செல்லுமாறு ஒரு கோடு வரையின் அது உருத்திரபுரம் கிராம எல்லையைச் சந்திக்கும் வரையும், பின்பு உருத்திரபுரம் அக்கராயன் குளம் கிராம எல்லையோரமாக மேற்கு நோக்கி உருத்திரபுரம் குளம் வரை சென்று கலவளப்பு ஆறு மத்தியூடாக வடக்கு நோக்கி 200 மீற்றர் தூரம் செல்லும் வரையும். பின்பு இந்தப் புள்ளியிலிருந்து கிழக்கு நோக்கி அண்ணளவாக ஒரு கோடு வரையின் அது நீவில் உருத்திரபுரம் கிராம எல்லையைச் சந்திக்கும் வரையும், மேலே கூறப்பட்ட எல்லையோரமாக சென்று, பரந்தன், பூநகரி பிரதான வீதியினை ஊடறுத்துச் சென்று, வடக்கு எல்லையின் தொடக்கப் புள்ளியைச் சந்திக்கும் வரையும்.

*3- 795*